**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8098648

1. District : நாமக்கல் PS: உ.த.க.பிரிவு Year: 2020 FIR No.: 08/AC/2020 Date:
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The P.C. Act, 1988 as Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: amended by the Prevention of Corruption (Amendment) Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Act, 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 1) 24.12.2020 Date to நாள் வரை : மாலை சுமார் 17.15 மணி)
Time Period நேர அளவு :
Time from நேரம் முதல் : 2) 26.12.2020 Time to நேரம் வரை : பகல் சுமார் 11.45 மணி)
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.12.2020 Time நேரம் : காலை 07.30 மணிக்கு
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.12.2020 Vol. IV Time நேரம் : காலை 07.30 மணிக்கு

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் திருச்செங்கோடு நகராட்சி சுமார் 40 கி.மீ., மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District : –
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு.K.சண்முகம் (b) Father's/ Husband's Name : கண்ணன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 15.06.1965 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனியார் ஊழியர் (g) Address : முகவரி க.எண் 4/1, மேட்டுத்தெரு -3, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. ஆனந்த், பில் கலெக்டர், நகராட்சி அலுவலகம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது !

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு [signature]

[signature] 28/12/2020.
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 28.12.20
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28.12.2020, 09.00 மணி.

Name: பெயர் M. [illegible],
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர், [illegible]

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/AC/2020 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

இன்று 28.12.2020-ஆம் தேதி திங்கள்கிழமை காலை 07.30 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, திருச்செங்கோடு, மேட்டுத்தெரு-3, கதவு எண்.4/1-ல் வசிக்கும் திரு.கண்ணன் என்பவரின் மகன் திரு.K.சண்முகம் என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் K.சண்முகம் த/பெ. கண்ணன் 4/1 மேட்டுத்தெரு-3 திருச்செங்கோடு நாமக்கல் மாவட்டம். பெறுதல் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாமக்கல். ஐயா, பொருள்: புதிய வீட்டுவரி நிர்ணயம் செய்ய கையூட்டு கேட்கும் திருச்செங்கோடு நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோருதல் - சம்மந்தமாக. நான் திருச்செங்கோடு மேட்டுத்தெருவில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். தனியார் டிரான்ஸ்போர்ட் கம்பெனியில் கம்ப்யூட்டர் இயக்குநராக வேலை செய்து வருகிறேன். எனது அம்மா பெயரில் திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.26-ல் கதவு எண்.4/1-ல் பூர்வீகமாக பாத்தியப்பட்ட வீடு இருந்தது. சுமார் 8 வருடத்திற்கு முன் அந்த வீட்டை இரண்டு வீடாக பிரித்து ஒரு வீட்டை எனது பெயருக்கும், மற்றொரு வீட்டை எனது அண்ணன் பெயருக்கும் எனது அம்மா தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்திருந்தார். எனது அம்மா பெயரில் ஏற்கனவே திருச்செங்கோடு நகராட்சியில் மேற்படி கதவு எண்.4/1-ற்கு வரி செலுத்தி வந்தார். எங்களது பெயரில் ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட்படி நான் எனது அம்மா பெயரில் இருந்த வரியை எனது பெயரில் மாற்றி வரி செலுத்தி வந்தேன். கடந்த 3 வருடங்களுக்கு முன்பு எனது அண்ணன் முரளிதரன் பெயரில் இருந்த வீட்டை நான் கிரையம் பெற்றுக் கொண்டேன். எனக்கு திருமண வயதில் இரண்டு மகன்கள் உள்ளனர். ஆகையால் எனது அண்ணனிடமிருந்து வாங்கிய வீட்டிற்கு தனியாக வரி செலுத்தி புதிய கதவு எண் பெற முடிவு செய்து அதுகுறித்து எங்கள் வார்டு பில் கலெக்டர் திரு.ஆனந்த் அவர்களிடம் கேட்டபோது அவர் ஒரு மனு எழுதி, உங்களுடைய கிரைய பத்திரம் மற்றும் வில்லங்க சான்று ஆகியவற்றின் நகல்களை இணைத்து

நகராட்சியில் கொடுத்தால் அதற்கான விண்ணப்ப படிவம் கொடுப்பார்கள் அதையும் பூர்த்தி செய்து பதிவு செய்துவிட்டால் உங்களுக்கு புதிதாக வீட்டு வரி நிர்ணயம் செய்து உத்தரவு வழங்கப்படும் என்று சொன்னார். அதன்படி நான் கடந்த 01.10.2020-ஆம் தேதி ஒரு மனு எழுதி அதனுடன் கிரையப்பத்திரம் மற்றும் வில்லங்கசான்று ஆகியவற்றை இணைத்து திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்திற்கு சென்று, அதைக் காண்பித்து ரூ.10-ற்கு விண்ணப்ப படிவம் பெற்று, அதனையும் பூர்த்தி செய்து கையெழுத்திட்டு ரூ.150/- செலுத்தி எனது வீட்டிற்கு புதிய வீட்டுவரி நிர்ணயம் செய்வதற்கான விண்ணப்பத்தை பதிவு செய்து ஒப்புகை ரசீது பெற்றேன். அதன்பின் சுமார் 10 நாட்களுக்கு ஒரு முறை திருச்செங்கோடு நகராட்சி அலுவலக வருவாய் பிரிவிற்கு சென்று திரு.ஆனந்த் மற்றும் வருவாய் ஆய்வாளர் திரு.முருகேசன் ஆகியோரிடம் எனது விண்ணப்பம் குறித்து கேட்டு வந்தேன். அந்த சமயத்தில் திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் கொரனா நோயினால் விடுப்பில் இருப்பதாகவும், அவர் வந்தவுடன் தான் உத்தரவு கிடைக்கும் என்று சொல்லி வந்தனர். கடந்த 24.12.2020-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு திருச்செங்கோடு வருவாய் பிரிவிற்கு சென்று அங்கிருந்த வருவாய் ஆய்வாளர் திரு.முருகேசன் அவர்களிடம் கேட்டபோது, அவர் இன்று நகராட்சி ஆணையாளர் நான்கு வீடுகளை பார்வையிட வருகிறார், நரிப்பள்ளம் பகுதிக்கு சென்றுவிட்டு உங்கள் வீட்டை கடைசியாக பார்வையிடுவார் என்றும், ஆனந்திடம் எல்லாம் சொல்லியுள்ளேன், அவர் சொன்னபடி நடந்து கொள்ளுங்கள் என்றும் சொன்னார். பின்னர் அன்று மாலை சுமார் 4.30 மணிக்கு திரு.ஆனந்த் எனக்கு போன் செய்து உங்கள் வீட்டின் அருகில் உள்ளேன், நகராட்சி ஆணையாளர் வந்துள்ளார், நீங்கள் வீட்டிற்கு வாங்க என்று சொன்னார். நான் எனது ஆபீசிலிருந்து வீட்டிற்கு சென்றேன். அப்போது ஆனந்த் மட்டும் அங்கிருந்தார், ஆணையாளர் எனது வீட்டை பார்த்துவிட்டு சென்றுவிட்டதாகவும், தன்னை வீட்டை அளந்து கொண்டு வரும்படியும் சொல்லியுள்ளதாக சொன்னார். பின்னர் திரு.ஆனந்த் அவர்கள் எனது வீட்டை அளந்து அவரது டைரியில் குறித்துக் கொண்டார். என்னை நகராட்சி அலுவலகம் வரும்படி சொல்லிவிட்டு சென்றுவிட்டார். நான் அன்று மாலை சுமார் 5.15 மணிக்கு திருச்செங்கோடு நகராட்சி அலுவலகத்திற்கு சென்று, வருவாய் பிரிவில் இருந்த திரு.ஆனந்த் அவர்களை பார்த்தபோது இனிமேல் தான் உங்கள் பைலை ரெடி செய்ய வேண்டும், ரூ.7,000/- பணம் செலவாகும் என்றும், அதில் நகராட்சி ஆணையாளருக்கு ரூ.3,000/- கொடுக்க வேண்டும், வருவாய் ஆய்வாளருக்கு

ரூ.1,000/- கொடுக்க வேண்டும் என்றும், மற்ற செக்சன் அலுவலர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றும், அதில் தனக்கு ரூ.500/- என்றும் சொன்னார். நான் சம்பளத்திற்கு தான் வேலைக்கு செல்கிறேன் என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் 5,000/- ரூபாயாவது கொடுக்க வேண்டியிருக்கும் என்று சொன்னார். நான் என்னால் அவ்வளவு பணம் கொடுக்க இயலாது என்று சொன்னேன். அவர் நான், அதிகாரிகளை கேட்டுவிட்டு உங்களுக்கு சொல்கிறேன், சனிக்கிழமை போன் செய்யுங்கள் என்று சொன்னார். ஆகையால் நான் 26.12.2020-ஆம் தேதி சனிக்கிழமை காலை சுமார் 10.00 மணிக்கு பில் கலெக்டர் ஆனந்த் அவர்களுக்கு போன் செய்து பேசினேன். அவர் மேட்டுத்தெருவில் இருப்பதாகவும், நகராட்சி அலுவலகத்திற்கு அருகில் என்னை வரச்சொன்னார். நான் எனது ஆபீசில் பர்மிசன் சொல்லிவிட்டு, காலை சுமார் 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்திற்கு அருகில் சென்று, அங்கிருந்து ஆனந்த்துக்கு போன் செய்தேன். அவர் வெயிட் பண்ணுங்க கூப்பிடுகிறேன் என்று சொன்னார். பின் சுமார் 11.40 மணிக்கு ஆனந்த் எனக்கு போன் செய்து எனது வீட்டிற்கு அருகில் வரச்சொன்னார். நான் சுமார் 5 நிமிடத்தில் எனது வீட்டருகில் சென்று அங்கு காத்திருந்த ஆனந்த்தை பார்த்தேன். அப்போது அவர் என்னிடம் ரூ.3,500/- பணம் கொடுத்திருங்க அதற்கு கம்மியாக முடியாது என்று சொன்னார். நான் வேண்டுமானால் ஆணையாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரை நேரில் பார்த்து கேட்கவா என்று அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் அவர்களை பார்க்கவேண்டியதில்லை, நான்தான் பைலை ரெடி செய்து கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் சம்பளத்தில் அட்வான்ஸ் வாங்கித்தான் கொடுக்க வேண்டும் இன்னும் கொஞ்சம் குறைத்துக் கொள்ள சொன்னேன். இதற்கு மேல் குறைக்க முடியாது என்றும், திங்கள்கிழமை பணம் ரெடிபண்ணிவிட்டு, எனக்கு போன் செய்யுங்கள், உங்களது பைலை எழுதி வச்சு உள்ளே கொடுத்துவிடுகிறேன், உங்களது வீட்டிற்கு வீட்டுவரி போட்டுவிடலாம் என்று சொன்னார். எனது வீட்டிற்கு புதிய வீட்டுவரி நிர்ணயம் செய்து கதவு எண் வழங்க திருச்செங்கொடு நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் பில் கலெக்டர் திரு.ஆனந்த் கேட்ட ரூ.3,500/- லஞ்சமாக கொடுக்க எனக்கு விருப்பமில்லை, ஆகையால் திரு.ஆனந்த் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (Sd/--xxx- K.Shanmugam) 28.12.20.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று, படித்துப்பார்த்து, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், எதிரிக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 28.12.2020-ஆம் தேதி காலை 08.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.08/AC/2020 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

(M. நல்லம்மாள்)
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.